10/=

பக்கங்கள் 04

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 22 வியாழக்கிழமை மே 25 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

வெள்ளி, ஞாயிறு
## வகுப்புக்கு ஆப்பு!

வெள்ளி, ஞாயிறு தினங்களில் மாணவர்களுக்கு தனியார் வகுப்புக்கள் நடத்துவதைத் தடைசெய்யும் நியதிச் சட்டம் விரைவில் வடக்கு மாகாணசபையில் கொண்டுவரவிருப்பதாக அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் அறிவித்துள்ளார். வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுநேரமும் ஏனைய நாட்களில் மாலை ஆறு மணிக்குப் பின்னரும் வகுப்புக்களை நடத்துவதைத் தடைசெய்யும் வகையில் மாகாணக் கல்வி அமைச்சினால் குறித்த சட்டம் கொண்டுவரப்படவுள்ளது. (எ-1)

ஊர்காவற்றுறையில்
# திடீர் சுற்றிவளைப்பு

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை பகுதியில் பொலிஸார் நேற்றும் இன்றும் திடீர் சுற்றிவளைப்பில் இறங்கினர். இந்தச் சுற்றிவளைப்பின் போது சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் அண்மையில் பஸ் மோதியதில் விபத்து ஒன்றில் மாணவர் ஒருவர் உயிரிழந்திருந்தார். இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் பொதுப் போக்குவரத்துக்கு குந்தகம் ஏற்படுமளவுக்கு அங்கு பதற்ற நிலை உருவாகியிருந்தது.

இந்நிலையில், குறித்த பகுதியில் வன்முறையை தூண்டும் வகையில் செயற்பட்ட நபர்களை கைது செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.எம். நியாழ் உத்தரவிட்டிருந்தார்.

04




பட்டதாரிகளுக்கு
## கண்டனம்

வடக்கு மாகாண சபையின் 92 ஆவது அமர்வின் போது பட்டதாரிகள் வாயிற் கதவுகளைப் பூட்டி ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் இன்று நடைபெற்ற 93 ஆவது அமர்வில் அதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். "பட்டதாரிகள் வாயிற்கதவுகளைப் பூட்டியதால் 92 ஆவது அமர்வில் நான் பங்குபற்ற முடியவில்லை. அப்போது மாகாணசபை என்ன நடவடிக்கை எடுத்தது?" என உறுப்பினர்அனந்தி சசிதரன் அவையில் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்குப் பதிலளித்த போதே அவைத்தலைவர் கண்டனம் வெளியிட்டுள்ளார். இனிவரும் காலங்களில் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிரான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-01)

## கண்டிக்காத மாகாணசபை

முள்ளிவாய்க்கால் நினைவுதினத்தின் போது எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தனுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து விசேட அவசர பிரேரணை ஒன்றினை இன்று கொண்டுவரப்போவதாக அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் அறிவித்திருந்தார். அது தொடர்பான ஒழுங்குப் பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இன்றைய அமர்வில் கண்டனத் தீர்மானம் அடங்கிய அவசர பிரேரணையினை முன்வைக்காது அறிக்கை ஒன்றை மட்டும் அவைத் தலைவர் வாசித் தார். இந்தத் பின்வாங்குதலுக்கு காரணங்கள் தெரியவரவில்லை. (எ-01)

## பணம் வசூலிக்கும் படைகள்




யுத்தத்தில் காயம் அடைந்து அங்கவீனமான படையினருக்கு நிதி வசூலிப்பதற்காக நாடு முழுவதும் கொடிவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. படையினருக்கு நிதி வசூலித்து அனுப்புமாறு கோரி யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்கள் மற்றும் திணைக்களுக்கும் கொடிகள் அனுப்பப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (எ-6)

ஜோசப் பரராஜசிங்கம் கொலை:
## முன்னாள் சிப்பாய் கைது

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில், 5ஆவது சந்தேகநபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளார்.

வெலிக்கந்தையைச் சேர்ந்த முன்னாள் இராணுவவீரரான மதுசங்க அல்லது வினோத் என்பவரே பொலிஸாரால் கைதாகி, மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார். அவரை ஜூன் 7 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் மா.கணேசராசா உத்தர விட்டார். இதேவேளை இன்னும் சில சந்தேகநபர்களைக் கைது செய்ய வேண்டியுள்ளதாக மன்றில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

தையிட்டி கிணற்றில்
# அள்ளப்பட்ட ஆயுதங்கள்

வலி.வடக்கில் தையிட்டிப் பகுதியில் அதிசக்தி வாய்ந்த வெடிபொருட்கள் பதுக்கிவைக்கப்பட்டிருந்த கிணறு ஒன்றிலிருந்து கடந்த வாரம் பெருமளவான குண்டுகள் மீட்கப்பட்டிருந்த நிலை யில் மீட்புப் பணிகள் இடைநிறுத்தி வைக்கப் பட்டிருந்தன. நேற்றுமுதல் மீண்டும் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. நேற்றும் இன்றும் சுமார் 250 இற்கும் அதிகமாக கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. இது வரை அக்கிணற்றிலிருந்து சுமார் 500 இற்கும் மேற்பட்ட கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. மேலும் பல குண்டுகள் காணப்படுவதால் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகத் தெரிய வருகின்றது. (எ-04)



புலிக்கொடிக்கு
## ஏன் தடை?

"தேசியக் கொடியில் தமிழ், முஸ்லிம் மக்களை அடையாளப்படுத்தும் நிறங்களை அகற்றிவிட்டு, தனிச் சிங்களக் கொடியை, தமிழர் பிரதேசத்தில் பறக்கவிட அனுமதிக்க முடியுமென்றால், தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரின்றி, புலிக்கொடிகளை நாங்கள் ஏன் பயன்படுத்த முடியாது?" என, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நாடாளுமன்றில் நேற்றுக் கேள்வியெழுப்பினார்.

"தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஒரு விதத்திலும், சிங்கள மக்களுக்கு ஒரு விதத்திலும் சட்டம் செயற்படுத்தப்படுகிறதா என மக்கள் அஞ்சுகின்றனர். கடந்த சில நாட்களாக முஸ்லிம் மக்களுக்கு எதிராக ஞானாசார தேரரால் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. முஸ்லிம்களின் சொத்துகள் சேதமாக்கப்பட்டுள்ளன. கடைகள் எரிக்கப்பட்டுள்ளன. அவர்கள் வெளியில் நடமாடப் பயப்படுகின்றனர்" என்றும் அவர் தெரிவித்தார். (இ)

## இன்னும் பெய்யும் மழை

சீரற்ற காலநிலை தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. எதிர்வரும் 48 மணித்தியாலங்களுக்கு நாட்டில் கடுமையான மழை பெய்ய கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தென் மேற்கு பருவப்பெயர்ச்சி நிலைமை ஏற்பட்டுள்ள தாகவும் மழை, பலத்த காற்று மற்றும் இடியுடன் கூடி மழை பெய்யக் கூடிய சாத்தியம் உண்டு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

கேப்பாபிலவு காணிகள்
## விரைவில் தீர்வு

"தெற்கை விடவும் வடக்கிலேயே காணி தொடர்பான பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்தப் பிரச்சினைகளை அடையாளங்கண்டு விரைவில் தீர்வு வழங்குவதற்காக வடபகுதிக்கு மிகவிரைவில் விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளேன்" என்று காணி அமைச்சராக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கயந்த கருணாதிலக எதிரொலிக்குத் தெரிவித்தார்.

காணி அமைச்சராக அவர் நாளை 9.45 அளவில் கொழும்பிலுள்ள காணி அமைச்சில் உத்தியோகபூர்வமாகக் கடமைகளை ஏற்கவுள்ளார்.

"தெற்கை விடவும் வடபகுதியிலேயே அதிகளவிலான காணி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் நிரம்பிவழிகின்றன. காணி அமைச்ச

04

தாய் அன்பு கிடைக்காத
# மாணவி தற்கொலை



தாயன்பு கிடைக்காத சோகத்தில் மாணவி ஒருவர் நேற்றுமாலை மன்னாரில் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்.

கொழும்பில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த ரயில் நடுவே பாய்ந்த சண்முகலிங்கம் மிதுலா என்ற மாணவியே உடல் தூண்டாகி துடிதுடிக்க பலியானார்.

தற்கொலை செய்வதற்கு முன்னர் அந்த மாணவி எழுதிவைத்த கடிதமும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. (அ)

## பிரிட்டன் குண்டுத் தாக்குதல்
# தந்தையுடன் சகோதரன் கைது


தாக்குதல் நடத்தியவர் | சகோதரர் | தந்தை

பிரிட்டனின் மான்செஸ்டர் நகரில் நடைபெற்ற குண்டுவெடிப்புக்கு காரணமான முக்கிய குற்றவாளியின் தந்தை மற்றும் சகோதரர் லிபியாவில் வைத்துக்கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

இத்தாக்குதலில் ஈடுபட்ட முக்கிய தற்கொலைதாரியின் விபரங்களை பொலிஸார் நேற்று வெளியிட்டிருந்த நிலையில் அவரது தந்தையும் சகோதரரும் இன்று கைதாகியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக இதுவரை 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# படகு கவிழ்ந்து பெரும் அனர்த்தம்



லிபியாவிலிருந்து இத்தாலிக்கு அகதிகள் சென்ற படகு மத்தியதரைக் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூன்று குழந்தைகள் உள்ளிட்ட 30 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

லிபியாவிலிருந்து சுமார் 500 முதல் 700 பேருடன் மத்திய தரைக்கடலில் மரப்படகு மூலம் இத்தாலியை நோக்கி பயணம் மேற்கொண்டுள்ளனர். லிபியா கடல் எல்லையிலிருந்து 20 கடல் மைல் தொலைவில் திடீரென படகு கவிழ்ந்தது.

விபத்துக் குறித்து தகவலறிந்து சென்ற மீட்புக்குழுவினர் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களை மீட்டனர். இதன் போது 3 குழந்தைகள் உள்ளிட்ட 30 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். (ஐ)

# ரஜினிக்காக சண்டை

ரஜினியின் அரசியல் பிரவேசம் குறித்து பாரதிய ஜனதா மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜனுக்கும், நடிகை குஷ்புவுக்கும் இடையே கடும் வாதம் நடந்துள்ளது.

இருவருக்கும் இடையிலான வாக்குவாதத்தில் கருத்துத் தெரிவித்தவர்களுக்கும் குஷ்பு பதிலடி கொடுத்துள்ளார். (ஐ)

# உயிர் காத்த பிச்சைக்காரர்

பிரிட்டன் வெடிகுண்டுத் தாக்குதலில் காயமடைந்து உயிருக்குப் போராடியவர்களை காப்பாற்றிய பிச்சைக்காரர் ஒருவரின் துணிச்சலைப் பாராட்டி பொதுமக்கள் நிதியை வாரி வழங்கி வருகின்றனர்.

இந்தத் தாக்குதலுக்குப் பின்னர் அங்கு உயிருக்குப் போராடிய கால்களை இழந்த சிறுமி ஒருவரை கிரைஸ் பார்க்கர் என்ற இந்த பிச்சைக்காரர் காப்பாற்றி வெளியே தூக்கிச்சென்றுள்ளார்.

இதனை தொடர்ந்து உயிரை இழக்கும் தருணத்தில் இருந்த பெண் ஒருவரையும் தனது கைகளால் தாங்கிப் பிடித்து ஆறுதல் கூறியுள்ளார். ஆனால், அப்பெண் இறுதியில் உயிரை விட்டுள்ளார். இச்சம்பவத்திற்குப் பின்னரும், தாக்குதல் நடந்த இடத்தில் இருந்து பலரையும் இவர் காப்பாற்றி வெளியே அழைத்து வந்துள்ளார்.(ஒ)

# முதல் வெற்றி




தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, மோர்கனின் சதத்தின் (107) உதவியுடன் 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 339 ஓட்டங்களைச் பெற்றது.

பின்னர் ஆடிய தென்னாபிரிக்க அணி 45 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 267 ஓட்டங்களையே சேர்த்தது.

இதனால், 72 ஓட்டங்களால் இங்கிலாந்து வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக இங்கிலாந்தின் அலி தெரிவுசெய்யப்பட்டார்.

# செய்தி வாசிக்க வந்த நாய்



ரஷ்யத்தொலைக் காட்சி ஒன்றில் செய்தியாளர் செய்தி வாசித்துக் கொண்டிருந்த போது, நாய் ஒன்று திடீரென்று உள்ள வந்த சம்பவம் தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாக பரவி வருகிறது.

செய்தியாளர் அதைச் சமாளித்த நிகழ்வை அந்தத் தொலைக்காட்சியின் யூடியுப் பக்கத்தில் பதிவேற்ற, பல லட்சம் பேர் அந்த வீடியோவைப் பார்த்துள்ளனர்.

இதனைப் பலரும் செய்தி வாசிக்க வந்த நாய் எனக் கூறிவருகின்றனர்.(ஐ)

# சிறைவாசம் போதும்



கடந்த 2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசிய வைகோ மீது தொடுக்கப்பட்ட தேசத் விரோத வழக்கு கடந்த மாதம் 3ஆம் திகதி விசாரணைக்கு வந்தபோது, பிணை பெறுவதற்கு வைகோ மறுப்புத் தெரிவித்தார்.

இதையடுத்து அவரை நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து வைகோ, புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

51 நாட்களை சிறையில் கழித்த பின்னர் தனக்கு பிணை வழங்கக் கோரி வைகோ திடீரென கடந்த செவ்வாய்க்கிழமை சென்னை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இதையடுத்து எந்தவித நிபந்தனையும் விதிக்காமல் பிணையில் செல்ல வைகோவுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில் 52 நாட்களை சிறையில் கழித்த வைகோ இன்று பிணையில் விடுவிக்கப்பட்டார். (ஒ)

# ரஜனியின் புதிய படம்

கபாலி பட வெற்றியைத் தொடர்ந்து ரஜினி, ரஞ்சித் இருவரும் மீண்டும் இணைந்திருக்கும் புதிய படத்தின் தலைப்பு இன்று காலை 10 மணிக்கு வெளியிடப்பட்டது.

தனுஷ் தயாரிக்கும் இப்படத்தின் படப் பிடிப்பு இம்மாத இறுதியில் தொடங்கவிருக்கும் நிலையில், படத்துக்கு "காலா கரிகாலன்" என்று பெயர் சூட்டப் பட்டு முதல் பார்வை வெளியிடப் பட்டுள்ளது.




# கொலைக்களமாகும் எவரெஸ்ட்



கடந்த மாதம் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி காணாமல் போன 4 பேரின் உடல்களை அங்கு மீட்பு பணியில் ஈடுபட்ட ஷெர்பா பழங்குடியினர் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த மாத இறுதியில் 7,950 மீற்றர் உயரத்தில் சிகரம் ஏறுவதில் ஈடுபட்டிருந்த 2 நேபாள நாட்டவர் உட்பட 4 பேர் திடீரென மாயமாகியிருந்தனர். இவர்களின் உடல்களே தற்போது மீட்கப்பட்டுள்ளன.

இதையடுத்து கடந்த ஒரு மாதத்தில் மாத்திரம் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியபோது பலியானவர்களின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்தது. (ஐ)

## நவிண்டில் கலைமதியின் உதைபந்தாட்டத் தொடர்:
# அடுத்த சுற்றில் திருக்குமரன், ஐயனார்




நவிண்டில் கலைமதி வி.கழகம் யாழ் மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் 4:1 என்ற கோல் கணக்கில் திருக்குமரன் கழகம் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

மற்றொரு ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் வி.கழகத்தை எதிர் கொண்ட துறையூர் ஐயனார் வி.கழகம் 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.(ஏ-23)



## பாடசாலைக்கு கதிரைகள் அன்பளிப்பு

சாவகச்சேரி வர்த்தக சங்கத்தின் அனுசரணையில் மூன்று வர்த்தகர்கள் இணைந்து சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரிக்கு 300 பிளாஸ்டிக் கதிரைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இந் நிகழ்வு நேற்று காலை பாடசாலை மண்டபத்தில் கல்லூரி முதல்வர் ஜெயக்குமாரன் தலைமையில் இடம்பெற்றது. இக் கதிரைகளை சாவகச்சேரியைச் சேர்ந்த வர்த்தகர்களான வை.சிவராசா,கு.பாக்கிய ராஜ், வே.சிவதுனன் ஆகியோர் அன்பளிப்பாக வழங்கி உள்ளனர். இவற்றின் பெறுமதி சுமார் மூன்று லட்சம் ரூபா எனத் தெரிவித்துள்ளனர். (உ)

## கட்டுநாயக்காவில் கட்டுப்பாடு!

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாகப் பயணம் செய்யும் விமானப் பயணிகள், கைப்பையில் காவிச் செல்லக் கூடிய பொருட்கள் தொடர்பாக புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. புதிய நடைமுறைகளின் படி, விமானப் பயணிகள் கையில் காவிச் செல்லும் பையில் எடுத்துச் செல்லக் கூடிய திரவப் பொருட்களின் அளவு ஒரு லீற்றருக்குட்பட்டதாக மட்டுப் படுத்தப்படவுள்ளது. இதேவேளை மருந்துகள் மற்றும் குழந்தைகளுக்கான உணவுகள் மருத்துவரின் வழிகாட்டலுக்கு ஏற்பவே அனுமதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# இன்றைய கருத்தோவியம்




# மாம்பிராய் கிராமம் மக்களிடம் கையளிப்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் கடந்த ஆறுமாதங்களுக்கு முன்னர் ஜே/233 காங்கேசன்துறை மாம்பிராய் கிராமம் விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும் பொலிஸார் குறித்த பிரதேசங்களிலிருந்து வெளியேறாதிருந்தனர். இந்நிலையில் கடந்தவாரம் குறித்த பிரதேசத்திலிருந்து பொலிஸார் முகாம்களை அகற்றிய நிலையில் இராணுவ அரண் அமைக்கப்பட்டிருந்த பகுதிகள் நேற்று முதல் துப்புரவு செய்யப்பட்டு வருவதாக வலி. வடக்கு மீள்குடியேற்ற சங்கத் தலைவர் சஜீபன் தெரிவித்துள்ளார். துப்புரவுப் பணிகள் முடிவுற்றதும் மக்களிடம் குறித்த காணிகள் கையளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (எ)

## மீனவர்கள் மீண்டனர்

காணாமல் போன மீனவர்கள் மட்டக்களப்புக்கு திரும்பியுள்ளனர். சில நாள்களுக்கு முன்னர் மீனவர்கள் காணாமல் போயுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் இந்த மீனவர்கள் தற்போது வீடு திரும்பியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. 19 மீன்பிடிப் படகுகளில் சென்ற வர்களே இவ் வாறு காணாமல் போயிருந்தனர். (இ)

## விண்ணப்பம்

அதி சிறப்பு கிராம உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்ப முடிவுத் திகதி 02.06.2017 ஆகும். (உ-6)

# எரிவாயு மின் திட்டம்

## இந்தியா-ஜப்பான் கூட்டு முயற்சி



இந்தியாவும் ஜப்பானும் இணைந்து இலங்கையில் 250 மில்லியன் டொலர் செலவில், திரவ இயற்கை எரிவாயு இறக்குமதி முனையத்தை உருவாக்க வுள்ளன. இலங்கையில் அதிகரித்து வரும் சீனாவின் தலையீடுகளுக்கு எதிராக ஜப்பானும், இந்தியாவும் இணைந்து முன்னெடுக்கும் முதல் கூட்டு நடவடிக்கை இது என்று இந்தியாவின் பிரிஜ செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இதன் மூலம் கரவெலப்பிட்டியவில் உள்ள மின் நிலைய யத்துடன் இணைந்ததாக, 300 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட எரிவாயு மின்திட்டத்தை உருவாக்க வுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## சாரதிகளுக்கு பயிற்சி வகுப்பு

வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ள நிலையில் சாரதிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுவருகின்றன. இதன் ஒரு அங்கமாக வலி மேற்கு பிரதேசத்திற்குட்பட்ட முச்சக்கரவண்டி, தனியார் பேருந்து மற்றும் சிறியரக வாகனச் சாரதிகளுக்கான விசேட பயிற்சி வகுப் பொன்று ஒழுங்குபடுத் தப்ப ட்டுள்ளது. எதிர்வரும் 09.06.2017 அன்று வலி.மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 8.30 மற்றும் நண்பகல் 12.30 மணிக்கு இரு அமர்வுகளாக பயிற்சி வகுப்புக்கள் நடைபெற வுள்ளன. (உ-6)

## பொலிஸாரை மிரட்டிய மினி சூறாவளி



வவுனியாவில் நேற்று ஏற்பட்ட மழையுடன் கூடிய மினி சூறாவளியில் மரங்கள் முறிந்து விழுந்து வாகனங்கள் பல சேதமடைந்தன. இதன்போது வவுனியா பொலிஸ் நிலையத்தில் நின்ற மரம் ஒன்று முறிந்து விழுந்தமையால் 5 மோட்டார் சைக்கிள்கள் சேதமடைந்ததுடன், பொலிஸ் நிலையத்தில் இருந்த விடுதிக் கட்டடம் ஒன்றின் பகுதியும் இடிந்து விழுந்துள்ளது. (உ)

## சிமெந்து பைகள் அன்பளிப்பு



கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேசசபைக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் வறுமைகோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்கள் இரண்டுக்கு வீடு திருத்தம் செய்வதற்காக சிமெந்து பைகள் வழங்கப்பட்டன. வடமாகாணசபை உறுப்பினரும் சிறிலங்கா சுதந்திர கட் சியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான அகிலதாஸ் சிவக்கொழுந்துவின் நிதி ஒதுக்கீட்டில் தலா 33 சிமெந்து பைகள் வீதம் இரண்டு குடும்பங்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டன. (உ-11)

## தலையணை மாற்றமே!

"அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றம், தலை வலிக்குத் தலையணையை மாற்றியதைப் போன்றதாகும்" என்று, பெவிதி ஹன்ட அமைப்பின் தலைவர் முருத்தொட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார். (இ)

# வன்முறைகளைத் தடுக்க பொலிஸார் தவறிவிட்டனர்



முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களை தடுக்க பொலிஸார் தவறிவிட்டதாக, மனித உரிமை செயற்பாட்டாளரான விக்டர் ஐவன் குற்றஞ்சாட்டியுள்ளார். முஸ்லிம்களுக்குச் சொந்தமான வணிக நிலையங்கள், பள்ளிவாசல்கள், மையவாடி என்பனவற்றின் மீது கடந்த ஒரு மாத காலத் துக்குள் இடம் பெற்றுள்ள 20 வரையான தாக்குதல்கள் தொடர்பாக இதுவரையில் பொலிஸா ரால் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (உ)

## நாளை நாளும் கோளும்

26.05.2017 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் வைகாசி மாதம் 12ஆம் நாள்

பிரதமை மு.இ. 11.43 வரை | ரோகிணி மு.இ. 11.22 வரை | மரணயோகம்

இராகுகாலம் 10.22-11.52 | சுபநேரம் 05.52-07.22 | எமகண்டம் 02.52-04.22

கொடியேற்றம்
- கெருடாவில் வீரகாளியம்மை
- கந்தரோடை அருளானந்தப்பிள்ளையார்

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மகிழ்ச்சி | எதிர்ப்பு | வெற்றி | தடங்கல் | நட்பு | தோல்வி | இலாபம் | ஊக்கம் | சுகம் | அசதி | புகழ் | ஆர்வம் |

# கல்வளைக்கு புதிய நீர்த்தாங்கி



யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கல்வளை கிராமத்தில் நீண்டகாலமாக நிலவி வரும் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா. டெனிஸ்வரன் , மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் வலி தென் மேற்கு பிரதேச சபை செயலாளர் எஸ்.சற்குணராஜா ஆகியோர் இணைந்து நேற்றுப் புதன்கிழமை மாலை 4:30 மணியளவில் புதிய நீர்த்தாங்கியை பிரதேச சபையின் உதவியோடு நிறுவி, அதனை உத்தியோகபூர்வமாக திறந்துவைத்தனர்.(இ)

## கவிஞர் காமராசன் மறைவு



கவிஞர் நா.காமராசன் நேற்று இரவு சென்னையில் காலமானார். அவருக்கு வயது 75.

சிறு வயது முதலே தமிழ்மீது தீராத ஆர்வத்தைக் கொண்டிருந்த அவர், எம்.ஜி.ஆர் காலத்தில் திரைப்படத் துறையில் அறிமுகமாகியிருந்தார். பல படங்களுக்குப் பாடல்கள் எழுதியுள்ள இவர் பல நூல்களையும் வெளியிட்டுள்ளார். அ.தி.மு.கவில் இணைந்த அவர் முக்கிய பல பதவிகளிலும் இருந்துள்ளார். (எ)

# அந்த நாள் ஞாபகம்.....!



**2001.05.25**

அமெரிக்காவைச் சேர்ந்த 32 வயது எரிக் வைஹென்மாயர் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதலாவது கண் பார்வை இழந்த மனிதர் என்ற பெருமையைப் பெற்றார்.

# மரம் முறிந்து சிறுமி காயம்

மாத்தளை, ரத்தொட்ட பண்டாரபொல பிரதேசத்திலுள்ள வீடொன்றின் மீது, மரம் முறிந்து விழுந்ததில், வீட்டிலிருந்த 7 வயது சிறுமியொருவர் படுகாயமடைந்த நிலையில், மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, மாத்தளை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மேற்படி பகுதியில், நேற்றுப் புதன்கிழமை மாலை வீசிய காற்றுக் காரணமாகவே, வீட்டு வளாகத்திலிருந்த மரம் முறிந்து விழுந்துள்ளது. (ஆ)

# சமாதான முயற்சிகள் மந்தகதியில்

## ஐரோப்பிய ஒன்றியம் குற்றச்சாட்டு



இலங்கையின் சமாதான முனைப்புக்கள் மிகவும் மந்த கதியில் நகர்கின்றன என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. காணாமல் போனோர் அலுவலகம் போன்ற நேரடியாக மேற்கொள்ளக்கூடிய விடயங்களைக் கூட அரசாங்கம் முனைப்புடன் மேற்கொள்ளத் தவறியுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளது. இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் ரொங்லாய் மர்க்ஜி நல்லிணக்க முனைப்புக்களை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் மேலும் கூடுதல் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். (எ)

# 60 இளையோருக்கு எய்ட்ஸ்

“எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகியவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் இரத்தினபுரி மாவட்டத்தில் அதிகரித்துவருகிறது. அங்கு எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகிய 60 பேர் இதுவரையிலும் இனங்காணப் பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் இளவயதினர். பாதுகாப்பற்ற உடலுறவும், பாலியல் தொழிலுமே இதற்கு முக்கிய காரணம்”

என்று இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் தொற்றுநோய் மற்றும் எய்ட்ஸ் தொற்று பரவுவதை தடுப்பதற்கான பிரிவின் தலைமை அதிகாரி வைத்தியர் காஞ்சனா உபசேன தெரிவித்தார். (ஆ)

# இலங்கையரின் சடலம் மீட்பு



தென் கொரியாவில் சேவையில் ஈடுபட்டிருந்த நிலையில் கடலில் மூழ்கி காணாமல் போன இலங்கையரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான அநுர கிரிஷாந்த என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

# பின்வாங்கிய பிக்குகள்



இராவணபலய அமைப்பின் ஏற்பாட்டில் 300 பிக்குகள் வடக்கு மாகாண சபையை முற்றுகையிட்டு கண்டன ஆர்ப்பாட்டமொன்றை இன்று நடத்த முற்பட்டிருந்தனர்.

எனினும் எந்தவொரு பிக்குவையும் இன்றைய அமர்வின்போது மாகாணசபைமுன் காண முடியவில்லை என எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

நாவற்குழியில் முன்னெடுக்கப்படும் பௌத்த விகாரை அமைப்பு பணிகளுக்கு வட மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சு தடைவிதித்துள்ள நிலையில் இதற்கெதிராகவே இன்றைய கண்டன ஆர்ப்பாட்டத் திற்கு திட்டமிட்டிருந்ததாக் கூறப்படுகின்றது.

எனினும், இது குறித்துக் கருத்துத் தெரிவித்த இராவணபலய அமைப்பின் பொதுச் செயலாளர் இத்தே கந்தே சத்தா கித்த, “இதுகுறித்து எமக்கு எதுவும் தெரியாது. அத்தகைய ஏற்பாடுகளை நாம் மேற்கொள்ளவில்லை. இனங்களுக்கிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தக் கூடிய செயல்களில் ஈடுபடமாட்டோம்” எனத் தெரிவித்தார். (எ)

# விபத்தில் சிப்பாய் காயம்




கோப்பாய்ச் சந்தியில் நேற்றிரவு இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் விசேட அதிரடிப் படைச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளுடன் மோதியதாலேயே 44 வயதான அபேசிங்க என்ற அதிரப்படைச் சிப்பாய் காயமடைந்து, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ)

# ரவியை முத்தமிட்ட மங்கள



புதிய நிதியமைச்சராக நியமிக்கப்பட்ட மங்கள சமரவீர தனது அமைச்சுப் பொறுப்புக்களை உத்தியோகபூர்வமாக இன்று ஆரம்பித்தார்.

நிதியமைச்சுக்கு சென்ற மங்கள் சமரவீர, ஆடம்பரம் இன்றி எளிய முறையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இதன்போது முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவை மகிழ்ச்சிப் பெருக்கோடு மங்கள முத்தமிட்டார். (அ)

## கேப்பாபிலவில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராக நாளைய தினம் நான் கடமைகளை ஏற்றுக்கொண்ட பின், வடபகுதிக்கான விஜயத்தை மிகவிரைவில் மேற்கொள்ளவிருக்கின்றேன். இதன்போது முல்லைத்தீவு கேப்பாபிலவு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நிலவிவருகின்ற காணிப் பிரச்சினைகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கலந்துரையாடி, உரிய தீர்வுகளை பெற்றுக்கொடுப்பேன்”என்று எதிரொலியிடம் வாக்குறுதி அளித்தார். (அ-5)

## ஊர்காவற்றுறையில்.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து, நேற்றும் இன்றும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எஞ்சியோர் அப்பகுதி பங்குத் தந்தையின் ஏற்பாட்டில் இன்று பொலிஸ் நிலையத்தில் சரணடையவுள்ளதாகத் தெரியவருகின்றது.(அ-12)

# விவசாயிகளுக்கு ஐம்பது வீதம் மானியம்

வெங்காயச் செய்கையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மானியம் வழங்க கமத்தொழிற் திணைக்களம் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

வெங்காய உற்பத்தியினை மேற்கொள்ளும் விவசாயிகள் அதிக விளைச்சலைத்தரும் “உண்மை விதைகளை“ ஐம்பது வீத மானிய அடிப்படையில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## வாசகர் கவனத்துக்கு...

**உங்கள் பிரதேச ஆலய, பாடசாலை, சன சமூக நிலைய, விளையாட்டு, நிகழ்வுகளை படங்களுடன் எமக்கு அனுப்பி வைத்தால் அன்றைய தினமே “எதிரொலி”யில் பிரசுரிப்போம். தகவல்களை** ethirolimedia@gmail.com **என்ற மின்னஞ்சல் முகவரியூடாகவோ தொலைபேசியூடாகவே அனுப்பிவைக்கலாம்.**

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 25.05.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.